


# மனைப்பிரிவு வரைபடம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம்

குற்றாலம் உள்ளூர் திட்டப்பகுதி

குற்றாலம் பேரூராட்சி / கிராமம்

நகரளவை வார்டு:பி, பிளாக்:1 நகரளவை எண் :**18/4** மற்றும் **4/3** (பழைய புல எண்:318**A pt,** 531/2) ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு = 1:400

இணையதள விண்ணப்பம் எண்: **1BNIM5Q2**

வ

## குறிப்பு:

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பு | = 9550.00ச.மீ |
| உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பளவு | = 3474.00ச.மீ |
| மீதமுள்ள பரப்பு | = 6076.00ச.மீ |
| கோரிய மனைகள் | = 31 |
| ஒதுக்கிய மனைகள் | = 26 |

மனைப்பிரிவு இடத்தின் எல்லை

நிலையில் உள்ள சாலை

உத்தேச மனைப்பிவு சாலை

## பொது ஒதுக்கீடுகள்

1.**TNCDBR** விதி 47(6) -ன் படி 10**%** பொது ஒதுக்கீடு (பூங்கா)பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.30,74,450/- நாள் 09.03.2023 ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

2.குற்றாலம் பேரூராட்சிக்கு தான பத்திர ஆவண எண்:617/2023 மற்றும் சீர்திருத்த ஆவண எண்:1364/2023 ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை.

(i)உத்தேச மனைப்பிவு சாலையின் பரப்பளவு = 3474.00 ச.மீ

**(ii).**உள்ளாட்சிக்கு-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு - Ⓐ = 38.40ச.மீ (0.63%)

**(iii).TANGEDCO** -விற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு - Ⓑ = 37.85ச.மீ (0.62%)

**3.**குற்றாலம் பேரூராட்சிக்கு பொது உபயோக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியது

திறவிடம் - 1 = 27.89 ச.மீ

திறவிடம் - 2 = 36.80 ச.மீ

கட்டிடவரம்பு: 7.20,9.00மீ அகல சாலைக்கு = 1.50மீ

10.0மீ அகல சாலைக்கு = 3.00மீ

மூலைமுடக்கு:

7.20மீ,9.00,10.0மீ அகல சாலைகளுக்கு = 1.50மீ ✕ 1.50மீ

## நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண்:134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:20.09.2002-ன்படி நில உரிமம் குறித்து செயல் அலுவலர் குற்றாலம் பேரூராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.மேலும் சாலைகள், திறவிடம் மற்றும் பொது உபயோகம் ஆகியவற்றின் நிலப்பரப்பினை குற்றாலம் பேரூராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதனை செயல் அலுவலா உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மற்றும் நிலஆர்ஜிதம் செய்துதரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் செயல் அலுவலர், குற்றாலம் பேரூராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்ப்படின், மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும்.
4. அரசாணை எண்:181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020 மற்றும் அரசாணை எண்:144 நாள் 16.07.2022 -ன் படி குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்
5. வனத்துறை, கனிமம் மற்றும் சுரங்கத்துறை,வேளாண்மை பொறியியல் துறை மற்றும் வருவாய் கோட்டாட்சித் தலைவர் ஆகியோர்களின் தடையின்மை சான்றின் அடிப்படையில் மனைப்பிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.
6. மனையிடத்தின் கிழக்கு மற்றும் வடக்கு எல்லையினை ஒட்டி நீரோடை அமைந்துள்ளதால் மனுதாரர் எல்லையில் தனது சொந்த செலவில் **R.C.C.RETAINING WALL** (தடுப்பு சுவர்) கட்டப்பட வேண்டும்.மேலும் நீரோடையில் மனைப்பிரிவில் இருந்து வெளியேறும் கழிவு நீர் ஏதேனும் கலக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.
7. மனைப்பிரிவு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஓடை, கால்வாய் போன்ற பொது நீர்வழிபாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும்,அரசு புறம்போக்கு நிலங்களில் மேற்படி மனைப்பிரிவு அமையவில்லை என்பதையும் செயல் அலுவலர், குற்றாலம் பேரூராட்சி உறுதி செய்து இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பொது ஒதுக்கீடுகளில் உள்ள வ.எண்.3- ல் குறிப்பிடப்பட்டுள்ள திறவிடம்-1 மற்றும் திறவிடம்-2 னை குற்றாலம் பேரூராட்சி தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பின் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ/தெமாநஊஅ எண்- **SWP/ 10 /**2023

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்.

அளவர் / உதவி வரைவாளர் வரைவாளர் நிலை -III மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tenkasi
Date:2023.04.2? ?0:56:36